| | |
|---|---|
| அ.வ.எண் | 47/2012 |
| பெயர் | சுப்ரமணியன் |
| தந்தை பெயர் | மகாலிங்கம் |
| சாட்சி | வா.சா.1 |
| நாள் | 06.08.2019 |

1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

சேலம் முதல் மேட்டூர் வரை செல்லும் பிரதான சாலைக்கு தென்புறம் தான் பிரச்சினைக்குரிய வழக்கு சொத்து அமைந்துள்ளது என்றால் ஆமாம். கிழக்கே உள்ள முதல் பாகம் 4 ம் வாதிக்கு பிரித்துகொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். அந்த சொத்திற்கும் மேற்கே 2 ம் பிரதிவாதி வெங்கடாஜலத்திற்கு பிரித்து கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். அதற்கும் மேற்கே 2 ம் வாதிக்கு கொடுக்கப்பட்ட சொத்து என்றால் ஆமாம். அதற்கும் மேற்கே 1 ம் வாதிக்கு சொத்து கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். மேற்படி சொத்துக்கள் ரோட்டை ஒட்டி பிரிக்கப்பட்டுள்ளதால் பிரதான சாலையில் இருந்து அவரவர் சொத்திற்கு செல்ல முடியும் என்றால் ஆமாம். 2 ம் பிரதிவாதியிடமிருந்து அவருடைய சொத்தை தான் 1 ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் ஆமாம். அதன் மொத்த விஸ்தீரணம் 43 சென்ட் என்றால் ஆமாம். 1 ம் பிரதிவாதி மேற்படி தன்னுடைய சொத்திற்கு சுற்றிலும் கம்பி வேலி போட்டுள்ளார் என்றால் ஆமாம். 1 ம் பிரதிவாதி கிரையம் பெறும்போது செக்குபந்தி குறிப்பிட்டு தான் கிரையம் பெற்றுள்ளார் என்றால் ஆமாம். 2 ம் பிரதிவாதிக்கு எங்களது குடும்பத்தில் ஏற்பட்ட பாகபிரிவினையின் மூலம் கிடைத்த சொத்துக்களை தான் 1 ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் ஆமாம். 2 ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்திற்கு பாகமுறி பத்திரத்திலேயே பாதைகள் ஏதும் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பாதைகள் உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. 1 ம் பிரதிவாதி கந்தன் மகன் முத்தன் என்பவருக்கு 20 சென்ட் ஒரு முறையும், 22 சென்ட் மற்றொருமுறையும் விற்பனை செய்ததாக பதில் வழக்குரையில் கூறியுள்ளது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 42 சென்டை கிரையம் பெற்ற முத்தன் என்பவரை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.2 ம் பிரதிவாதி 1 ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த சொத்தை 1 ம் பிரதிவாதியிடம் மீண்டும் தங்களுக்கே விற்பனை செய்யவேண்டும் என கேட்டு அதனை 1 ம் பிரதிவாதி மறுத்ததால் பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு எத்தனை சர்வே எண்களுக்கு எவ்வளவு விஸ்தீரணத்திற்கு போடப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன்

என்றால் தடம் வேண்டும் என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தடம் எவ்வளவு அகலம், எவ்வளவு நீளத்தில், எந்த சர்வே எண்ணில் செல்கிறது என்பதை என்னால் கூற முடியுமா என்றால் அகலம் 12 அடி, எந்த சர்வே எண் என்று எனக்கு தெரியாது. சேலம் மேட்டுர் பிரதான சாலைக்கு தெற்கே பாகபிரிவினை ஏற்பட்ட சொத்திற்கும் தெற்கே எனக்கு விவசாய நிலம் உள்ளதா என்றால் உள்ளது. அதன் சர்வே எண், பட்டா எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த தெற்கே எனக்கு உள்ளதாக கூறும் சொத்து விவசாய நிலம் பாகம் பிரிந்த சொத்திற்கு அடுத்ததாக உள்ளதா அல்லது இடையில் வேறு நபர்களின் சொத்துக்கள் உள்ளதா என்றால் என்னுடைய அண்ணனுடைய சொத்து இடையில் உள்ளது. அவர் 2ம் வாதி. 2ம் வாதிக்காகவும் சாட்சியம் அளிக்கிறேனா அல்லது 2ம் வாதி சாட்சியம் அளிக்க உள்ளாரா என்றால் அவருக்காகவும் தான் சாட்சியமளிக்கிறேன். 1ம் பிரதிவாதி வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்கள் குறித்து மேட்டுர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதிக்கு பாகபிரிவினையில் என்ன சொத்து ஒதுக்கப்பட்டதோ அதைதான் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றார் என்றால் 2ம் பிரதிவாதி தடத்தையும் சேர்த்து கிரையம் கொடுத்துவிட்டார். அதில் கிணறும் உள்ளது. வா.சா.ஆ.1 பாகபிரிவினை பத்திரத்தில் தடத்தை பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற 43 சென்டில் 42 சென்டை விற்பனை செய்தது போக உள்ள 1 சென்டை அபகரிப்பதற்காக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆடு, மாடு மேல்காட்டிற்கு சென்று வர தடம் உள்ளது. மேற்படி பாதை உள்ளதாக நான் கூறுவதற்கு நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு எழுதிய பத்திரம் என்ன முறையில் எழுத வேண்டும் என கூற எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. வழக்கில் எனக்கு எவ்வித பரிகாரம் கிடைக்கதக்கதல்ல எனவும், வழக்கு 1ம் பிரதிவாதியின் அதிக பட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. பிரதான சாலைக்கு தெற்கே எங்களுக்கு பாகபிரிவினை ஏற்பட்ட சொத்திற்கும் தெற்கே எனக்கோ, என்னுடைய பங்காளிகளுக்கோ நிலங்கள் இல்லை எனவும், வேறு நபர்களின் தூண்டுதலின் பேரில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**ஒப்பம்/- திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டுர்.**